








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 02.02.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்









# இந்திய நிகழ்வுகள்

- இந்தியாவின் **‘இரண்டாவது துலிப் மலர் பூங்கா’** வானது உத்திரகாண்ட் மாநிலத்தின், **பித்தோராகர்** மாவட்டத்தில் 50 ஹெக்டர் நிலப்பகுதியில் அமைய உள்ளது (India’s second tulip Garden, Uttarakhand).
    - இந்தியாவின் ‘முதலாவது துலிப் மலர் பூங்கா’, ஸ்ரீ நகரில் (ஜம்மு & காஷ்மீர்) அமைந்துள்ளது.

- **தெலுங்கானா** மாநில அரசு, புலிகளின் எண்ணிக்கையை பாதுகாப்பதற்காக, **மாநில புலிகள் பாதுகாப்புப் படையை** (State tiger Protection Force) **உருவாக்க முடிவு** செய்துள்ளது.
    - புலிகள் பாதுகாப்புப் படையை உருவாக்கும் இந்தியாவின் முதல் மாநிலம் தெலுங்கானா ஆகும்.

- **தேசிய உப்புச் சத்தியாகிரக நினைவகமானது, தண்டியில்** (குஜராத்) அமைக்கப்பட்டுள்ளது.
    - **காந்தியின் 71வது நினைவு நாளின்** போது இந்நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.
    - உப்புச் சத்தியாகிரக போராட்டம் **12 மார்ச் 1930** முதல் **6 ஏப்ரல் 1930 வரை** நடைபெற்றது. இதில் 78 பேர் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்ற **ஒரே பெண் சரோஜினி நாயுடு** என்பது குறிப்பிடத்தக்கது.

- அமைப்பு சார நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் **3000 ஓய்வூதியம்** வழங்குவதற்காக மத்திய இடைக்கால பட்ஜெட்டில், **‘பிரதான் மந்திரி ஸ்ராம் யோகி மந்தன்’** என்ற திட்டம் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# உலக நிகழ்வுகள்

- தனிம வரிசை அட்டவணை கண்டுபிடிக்கப்பட்டு 150வது ஆண்டை நினைவு கூறும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை மற்றும் யுனெஸ்கோ அமைப்பு **‘2019ம் ஆண்டை சர்வதேச தனிம வரிசை அட்டவணை** (The International Year of the periodic table 2019) **ஆண்டாக’** அறிவித்துள்ளது.

- தனிம வரிசை அட்டவணை **1869ம்** ஆண்டு ரஷ்ய அறிவியலாளர்கள் **'டிமிட்ரி மெண்டலீவ்'** என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியா** (UAE and Saudi Arabia) ஆகிய நாடுகள் இணைந்து **'அபெர்'**(Aber) என்ற பொதுவான **டிஜிட்டல் நாணயத்தை** தொடங்கியுள்ளன.

## விருதுகள்

- புது டெல்லியில் நடைபெற்ற **6வது பொதுத் துறை விருதுகள்** வழங்கும் விழாவில், **யுக்தி சார்** செயல்பாடுகள் நிதியியல் பிரிவில் சிறந்த **மினி ரத்னா** பொதுத்துறை நிறுவனத்திற்கான விருதை, நுமாலிகார்க் சுத்திகரிப்பு நிறுவனம் (Numaligarh Refinery Limited) பெற்றுள்ளது.
    - **NRL** என்பது பாரத் பெட்ரோலியத்தின், மினி ரத்னா நிறுவனமாகும் (அசாம்).

## நியமனங்கள்

- **இந்தியக் கடற்படையின் துணைத் தளபதியாக**, தேசிய பாதுகாப்பு கல்விக் கழகத்தின் தலைமைப் பொறுப்பாளராக உள்ள **ஜி. அசோக் குமார்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்தியக் கடற்படையின் தளபதியாக சுனில் லம்பா உள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **உலக புற்றுநோய் தினம் - பிப்ரவரி 4**
    - புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4ம் தேதி அன்று உலக புற்றுநோய் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
    - இந்த ஆண்டுக்கான (2019) உலக புற்றுநோய் தின **மையக்கருத்து – I Am and I Will**

# பொருளாதார நிகழ்வுகள்

- **இடைக்கால மத்திய பட்ஜெட் - 2019ல்** வரி விதிப்புக்குட்பட்ட தனிநபர் வருமானம் **ரூ.5 லட்சத்திற்குள் இருந்தால் வரிவிலக்கு அளிக்கப்படுவதாக** அறிவிக்கப்பட்டுள்ளது.
    - இதற்கு முன் 2.5 லட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது

We Shine Academy™